## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No. 97/2023

2025 –ம் ஆண்டு ஜூலை மாதம் 11 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 11.07.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. நடராஜன் (PW–1 ) | வயது | : | 73/2025 |
| த/க பெயர் | : | திரு.ராமச்சந்திரன் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | செல்லபிள்ளையார் கோட்டகம் | வட்டம் | : | மன்னார்குடி |

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

இந்த வழக்கு எப்போது தாக்கல் செய்தது என்றால் 2023. தாவா சொத்து எனக்கு வேண்டும் என்று கேட்கிறேனா என்றால் ஆமாம். தாவா சொத்தின் உரிமையாளர் யார் என்றால் சந்தானம் பண்டாரம் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். 2023 வரை தாவா சொத்தை நான் சாகுபடி செய்ததற்கான எந்த ஆவணத்திலும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்துள்ள கிஸ்து ரசீதுகள் அனைத்தும் சந்தானம் பண்டாரம் பின் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். சந்தானம் பண்டாரத்திற்கு பிறகு பிரதிவாதி ஆதித்யனுக்கு சொந்தமான சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணமானது எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் குத்தகை பதிவு செய்ததற்காக கொடுக்கப்பட்ட மனுவிற்கு வட்டாட்சியர் எனக்கு அனுப்பிய அழைப்பாணை.

நான் கொடுத்த மனுவானது தற்போது கைவசம் உள்ளதா என்றால் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். அந்த மனுவில் நடப்பு சந்தானம் பண்டாரம் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சந்தானம் பண்டாரம் பற்றி குறிப்பிட்டிருந்தால் அவருக்கும் வட்டாட்சியர் அழைப்பாணை அனுப்பியிருப்பார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணமான ரசீதுகளில்

ஒன்றில் மட்டும் எனது பெயரை மட்டும் குறிப்பிட்டு மோசடியாக வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. மற்ற ரசீதுகள் அனைத்தும் குத்தகை உரிமையாளரின் பெயரில் உள்ளது என்றால் சரிதான்.

வா.சா.ஆ–9 ஆவணமான கிஸ்து ரசீது தாவா சொத்திற்குதான் செலுத்தப்பட்டது என்பதற்கான எந்த குறிப்பும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 ஆவணமானது தாவா சொத்தின் உரிமையாளரான ஆதித்யன் பெயரில் செலுத்தாமல் எனது பெயரில் எனது செல்வாக்கை பயன்படுத்தி வரி செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.8 ஆவணத்தில் சொந்த நிலம் என்ற இடத்தில் எழுதப்பட்டுள்ளது, குத்தகை நிலம் தொடர்புடைய இடத்தில் எழுதாததால் 30.07.1992ம் தேதியிட்ட கருப்பு கிளார் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் வழங்கும் திட்டத்தில் கொடுக்கப்பட்ட அடையாள அட்டையானது தாவா சொத்திற்கு தொடர்பு இல்லாதது என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணங்களானது பிரதிவாதிக்கு தெரியாமல் என்னால் பெறப்பட்ட உத்தரவு என்றால் சரியல்ல. அந்த உத்தரவில் எதிர்மனுதாரர் பற்றிய குறிப்பில் நிலத்தின் உரிமையாளரான பிரதிவாதி பெயரை குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணங்களானது பிரதிவாதிக்கு தெரியாமல் என்னால் பெறப்பட்ட உத்தரவு செல்லதக்கதல்ல மற்றும் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் தாவா சொத்தினை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் என்னால் பெறப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் சாகுபடி செய்தபோது 05.10.2023ம் தேதியில் பிரதிவாதியானவர் தாவா சொத்து குறித்து பிரச்சனை செய்ததாக சொல்வது வழக்கிற்காக மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

நிலத்தின் உரிமையாளரான கே.ஆர்.எம்.எஸ்டேட் உரிமையாளரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி நிலத்தின் உரிமையாளரான கே.ஆர்.எம்.எஸ்டேட் உரிமையாளரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் இந்த வழக்கினை தள்ளுபடி செய்ய

வேண்டும் என்றால் சரியல்ல. உரிமையாளரான கே.ஆர்.எம்.எஸ்டேட் உரிமையாளரை இந்த வழக்கில் சேர்த்தால் உண்மை தன்மை தெரிய வரும் என்பதால்தான் நான் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். தாவா சொத்தானது பிரதிவாதியின் அனுபோகத்திலும், உரிமையிலும் இருந்து வருகின்ற விபரத்தினை மறைத்து இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்த இந்த வழக்கானது தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியல்ல. சரண்டர் பத்திரம் என்பது நிலத்தை யாரிடமிருந்து பெறுகிறாரோ அதே நபரிடம் திரும்ப ஒப்படைப்பதுதான் என்றால் சரிதான். பிரதிவாதியானவர் எனக்கு தாவா சொத்தை சரண்டர் கொடுத்ததாக சொல்வது சட்டப்படி செல்லதக்கது என்றால் சரியல்ல. பிரதிவாதியானவர் எனக்கு தாவா சொத்து பொறுத்து எந்தவித சரண்டர் பத்திரமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.08.16 17:47:41 +0530

District Munsif
Mannargudi.